# தமிழ் நூல்களுக்கான உரைமுயற்சிகள்: நடைமுறையும் சவால்களும்

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
University of Jaffna
E-mail:cumaran2004@yahoo.com

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் நீண்டதொரு உரைப்பாரம்பரியத்தினைக் கொண்டதாகும். செய்யுள் வழக்கும் செய்யுள் பயிற்சியும் அருகிச் செல்லும் தற்காலத்தில் உரையின் தேவை மேலும் மேலும் அதிகரித்துச் செல்கின்றது. இன்னும், தமிழ் நூல்களுக்கு ஆரம்பகால உரையாசிரியர்களால் எழுதப்பட்ட உரைகளை எளிமைப்படுத்தியும், சமகாலப் பொருத்தப்பாடுடையதாக்கியும் உரைகள் எழுதப்பட வேண்டிய நிலையும் தோன்றியுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதி வரையில் நிகழ்ந்த உரைமுயற்சிகள் பற்றி அக்கறைப்படும் ஆய்வாளர்கள் அதன்பின் நிகழ்ந்த உரைமுயற்சிகள் குறித்து அதிக கவனம் செலுத்தவில்லை. மேலும் பிற்காலங்களில் உரைகளை எழுதுவோருக்குத் தவறுதலான முன்மாதிரிகளாகவும் அமைவதற்குச் சாத்தியம் உண்டு. இதனால் தற்காலத்தில் எழுதப்பட்ட வரும் உரைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவது தேவையாகவுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியிலும் தற்காலத்திலும் எழுதப்பட்ட உரைகளை மையமாகக் கொண்டே இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. மேற்குறித்த கால எல்லையில் தோற்றம் பெற்ற உரைகளைப் பகுப்பாய்வும் மதிப்பீடும் செய்வதனூடாக அவற்றிலுள்ள போதாமைகளை, குறைகளை, இடைவெளிகளை அடையாளங்காண்பதும் அவற்றினை நீக்குவதற்குத் தேவையான உபாயங்களைப் பரிந்துரை செய்வதும் இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களாகின்றன. இந்த ஆய்வு விவரண ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. தற்காலத்தில் நிகழ்ந்து வருகின்ற உரைமுயற்சிகளின் போக்கினை தெளிவுபடுத்தவும் அவற்றின் பலம், பலவீனங்களை மதிப்பிடவும் பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறைகளும் இதில் பயன்படுத்தப்படுகின்றன. தமிழில் தற்காலத்தில் நிகழ்ந்து வரும் உரைமுயற்சிகள் குறித்த பகுப்பாய்வினை மேற்கொள்ளல், இப்பகுப்பாய்வின் ஊடாக உரைகளின் போக்கினை மதிப்பீடு செய்தல், இம்மதிப்பீட்டின் அடியாக தற்காலத்தில் நிகழ்ந்து வரும் உரையாக்க முயற்சிகளில் உள்ள இடைவெளிகளை இனங்காணல், இந்த இடைவெளிகளை நீக்குவதற்கான வழிமுறைகளைப் பிரேரித்தல் என்ற வகையில் இந்த ஆய்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தமிழ் நூல்கள் காலத்தை வென்ற படைப்புகளாக நின்று நிலைப்பதற்கு உரைகள் மிக அவசியமானவையாகும். புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவகையில் புதிய உபாயங்களை முன்னிறுத்திய உரைகளை எழுதுவது காலத்தின் தேவையாகிறது. இக்காலத்தின் தேவையைக் கச்சிதமாக நிறைவேற்றக் கூடிய உரைகளே சாகாவரம் பெற்ற உரைகளாக நின்று நிலைக்க முடியும்.

திறப்புச் சொற்கள்: உரைகள், உரையாசிரியர்கள், புத்துரை